# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~ DSP V&AC DGL
Under Section 173 BNSS

C 8102140

1. District மாவட்டம் : திண்டுக்கல் PS: காவல்நிலையம் : V&AC Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 07/24 Date: நாள் 19.09.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Act 1988 as amended by the Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 18.09.2024-ம் தேதி 17.45 மணி முதல் 19.09.2024-ம் தேதி 01.30 மணி வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.09.2024 Time : நேரம் 14.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 19.09.2024 Time : நேரம் 14.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 130 Km தென்மேற்கு திசை
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி A1291 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர், கொடைக்கானல்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் டா.அ.இராஜசேகர் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் [illegible]
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி [illegible] அம்பிகை அம்மாள் மதுரை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு.V.ராஜசேகரன், கூட்டுறவு சார்பதிவாளர், கொடைக்கானல் கள அலுவலர், கொடைக்கானல் வட்டம், திண்டுக்கல்.
2. திரு.R.S.[illegible], செயலாளர், A1291 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர், கொடைக்கானல் வட்டம்,
3. திரு.T.[illegible], செயலாளர், DD320, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், [illegible], கொடைக்கானல் வட்டம்,
4. திரு.R.[illegible], செயலாளர் ([illegible]) A1291 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், [illegible], கொடைக்கானல் வட்டம்,
5. திரு.T.[illegible] [illegible] ([illegible]) A1291 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர், கொடைக்கானல் வட்டம், திண்டுக்கல்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 19/9/24 [signature] 19/9/24.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

19.09.2024 —

Name: பெயர் ஜெ. நாகராஜன்
Rank: நிலை ………………….No. எண் ……….
காவல் ஆய்வாளர்,
சை. கு. பிரிவு,
திருநெல்வேலி.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.07/2024, சட்டப்பரிவு. 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தி அமைக்கப்பட்ட) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.**

திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணைக்கண்காணிப்பாளர் ஆகிய நான் இன்று 19.09.2024-ம் தேதி மதியம் 14.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது மதுரை மாவட்ட் ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.கா.இப்ராஹிம் சேட் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று 19.09.2024-ம் தேதி மதியம் 14.00 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.கா.இப்ராஹிம் சேட், த/பெ.காதர் மீரான், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மதுரை, பெறுநர்.காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல் அய்யா, நான் மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் ஆய்வுக்குழு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நேற்று 18.09.2024ம் தேதி திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல், மன்னவனூர், A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் முன்னாள் செயலாளர் திரு.R.பிச்சைமணி என்பவரும் திரு.T.கோபாலகிருஷ்ணன் போளுர் DD 320, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், . என்பவரும் கடந்த 2022-2023 ஆண்டில் மன்னவனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் செயலாளராக பணிபுரிந்த காலத்தில் விவசாயிகளுக்கு வட்டியில்லா கால்நடைபராமரிப்பு கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் தகுதி அற்றவர்களுக்கு வழங்கியதாகவும், அது தொடர்பாக கூட்டுறவு சார்பதிவாளர் திரு.V.ராஜசேகரன் அவர்கள் விசாரணை செய்வதாகவும், அந்த குற்றச்சாட்டுகளிலிருந்து மேற்படி செயலாளர்களை விடுவிப்பதற்காக லஞ்சமாக கையூட்டு பெற இருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் நேற்று 18.09.2024ம் தேதி 14.00 மணிக்கு திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திலிருந்து நான் மற்றும் திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் மற்றும் பார்ட்டி சகிதம் திடீர் சோதனை

செய்வதற்காக புறப்பட்டு சுமார் 17.45 மணிக்கு திண்டுக்கல் மாவட்டம் மன்னவனூர் To கொடைக்கானல் ரோட்டில் கைகாட்டி அருகே அமைந்துள்ள அரவிந்த் லாட்ஜின் இரண்டாவது தளத்தில் அமைந்துள்ள மன்னவனூர் A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நான் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் பார்ட்டி சகிதம் உள்ளே நுழைந்தபோது 1) திரு.V.ராஜசேகரன், கூட்டுறவு சார்பதிவாளர் 2) திரு.M.மகேஷ்குமார், கூட்டுறவு சார்பதிவாளர் 3) திரு.R.S.ராமசாமி, செயலாளர், A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர் 4) திரு.T.கோபாலகிருஷ்ணன், செயலாளர், DD 320, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், போளூர், 5) திரு.C.சவடமுத்து, எழுத்தர், A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர் 6) திரு.M.முருகானந்தம், சிற்றெழுத்தர், A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர், 7) திரு.M.சண்முகம், தற்காலிக நகைமதிப்பாளர், A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர் 8) திரு.T.கருணாநிதி, தற்காலிக பணியாளர் (கணிப்பொறி) A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர் 9) திரு.R.பிச்சைமணி, செயலாளர் (பணி ஓய்வு) A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர், 10) P.முத்துப்பாண்டி, த/பெ. R.பிச்சைமணி ஆகியோர் ஆஜரில் இருந்தனர். அவர்களிடம் நான் என்னையும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் மற்றும் போலீஸ்பார்ட்டியினரை அறிமுகம் செய்து மேற்படி அலுவலகத்தில் திடீர் தணிக்கை செய்வதற்காக வரப்பட்ட விபரத்தை அவர்களிடம் தெரிவித்தேன்.மேலும் இச்சோதனைக்கு ஒத்துழைப்பு தருமாறு துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அங்கிருந்த அலுவலர்களை கேட்டுக்கொண்டார். பின்னர் அவர்களும் ஒத்துழைப்பு தருவதாக தெரிவித்தனர். பின்னர் அங்கிருந்த அலுவலர்களை ஆய்வுக்குழு ஆய்வாளர் முன்னிலையில்

தனித்தனியாக சோதனை செய்ததில் கீழ்கண்டவாறு பணம் இருப்பது கண்டறியப்பட்டது.

| வ.எண் | அலுவலரின் பெயர் மற்றும் பதவி | கண்டறியிப்பட்ட தொகை ரூ. | திரும்ப கொடுக்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.V.ராஜசேகரன், , கூட்டுறவு சார்பதிவாளர், கொடைக்கானல் கள அலுவலர், கொடைக்கானல் வட்டம், திண்டுக்கல் மாவட்டம் | 2,000/- | 2,000/- |
| 2 | திரு.M.மகேஷ்குமார், கூட்டுறவு சார்பதிவாளர், பொது விநியோக திட்டம், கொடைக்கானல் வட்டம்,திண்டுக்கல் மாவட்டம் | 390/- | 390/- |
| 3 | திரு.R.S.ராமசாமி, செயலாளர், A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர், கொடைக்கானல் வட்டம், திண்டுக்கல் மாவட்டம். | 270/- | 270/- |
| 4 | திரு.T.கோபாலகிருஷ்ணன், செயலாளர், DD 320, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், போளூர், கொடைக்கானல் வட்டம், திண்டுக்கல் மாவட்டம். | ரூ17,310/- 500x34=17,000/- | 310/- |
| 5 | திரு.C.சவடமுத்து, எழுத்தர், A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர், கொடைக்கானல் வட்டம், திண்டுக்கல் மாவட்டம். | 500/- | 500/- |
| 6 | திரு.M.முருகானந்தம், சிற்றெழுத்தர், A1291,தொடக்க | 370/ | 370/- |

| | | | |
|---|---|---|---|
| | வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர், கொடைக்கானல் வட்டம், திண்டுக்கல் மாவட்டம். | | |
| 7 | திரு.M.சண்முகம், தற்காலிக நகைமதிப்பாளர், A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர், கொடைக்கானல் வட்டம், திண்டுக்கல் மாவட்டம். | 2250/- | 2250/- |
| 8 | திரு.T.கருணாநிதி, தற்காலிக பணியாளர் (கணிப்பொறி) A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர், கொடைக்கானல் வட்டம், திண்டுக்கல் மாவட்டம். | 10000.= (500x20) & 580/- | 580/- |
| 9 | P.முத்துப்பாண்டி, த/பெ. R.பிச்சைமணி,, செக்காபட்டி, நிலக்கோட்டை தாலுகா, திண்டுக்கல் மாவட்ட்ம் திரு.R.பிச்சைமணி, செயலாளர் (பணி ஓய்வு) A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர் என்பவரின் மகன் | 500x50=25000., 500x6=3000/- 200x1=200, 100x1=100,50x 1=50, 20x1=20/- | 3370/- |
| 10 | திரு.R.பிச்சைமணி, செயலாளர் (பணி ஓய்வு) A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர், கொடைக்கானல் வட்டம், திண்டுக்கல் மாவட்டம். | 340/- | 340/- |

மேலே வரிசை எண்கள் 4,8,9ல் கூறப்பட்ட நபர்களிடம் மேற்படி பணம் குறித்து கேட்டபோது அந்தபணம் அவர்களது சொந்தப்பணம் என்றும், அவசர தேவைக்காக வைத்திருப்பதாகவும், எந்தவித தகுந்த ஆதாரமும் தங்களிடம் இல்லை எனவும் தெரிவித்தனர். அவர்களது விளக்கம் ஏற்றுக்கொள்ளதக்க வகையில் இல்லாததாலும் வரிசை எண் 4,9 ல் சொல்லப்பட்ட நபர்கள் வட்டியில்லா கால்நடை பராமரிப்பு கடனை தகுதியற்ற நபர்களுக்கு வழங்கியதாக இருக்கும் குற்றச்சாட்டில் இருந்த விடுபடும் நோக்கில் கூட்டுறவு சார்பதிவாளர் திரு.ராஜசேகரன் அவர்களுக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டு வந்திருக்கலாம் என்று நம்புவதற்கு தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால் மகஜரில் வரிசை எண் 4ல்சொல்லப்பட்ட நபரிடமிருந்து ரூ.17,000/- வரிசை எண்8ல் சொல்லப்பட்ட நபரிடமிருந்து ரூ.10,000/- மற்றும் வரிசை எண்.9ல் சொல்லப்பட்ட நபரிடமிருந்து ரூ.25,000/- ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் மன்னவனூர் கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலாளர் திரு.இராமசாமி என்பவரிடம் அலுவலகத்தின் பணியாளர் வருகை பதிவேட்டை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது, அவரும் பணியாளர் வருகை பதிவேட்டை ஆஜர் செய்தார். அந்த பதிவேட்டை ஆய்வு செய்தபோது 18.09.2024ம் தேதி செயலாளர் திரு.இராமசாமி, எழுத்தர் திரு.C.சவடமுத்து, மற்றும் சிற்றெழுத்தர் திரு.M.முருகானந்தம் ஆகியோர் வருகை பதிவேட்டில் சுருக்கொப்பம் செய்திருந்தார்கள். பின்னர் செயலாளர் அவர்களிடம் கூட்டுறவு கடன் சங்கத்தின் Cash Bookஐ ஆஜர் செய்யுமாறு காவல் துணைக்கண்காணிப்பாளர் கேட்டுக்கொண்டார். செயலாளர் ஆஜர் செய்த Cash Bookஐ ஆய்வு செய்தபோது 18.09.2024 அன்று ஆரம்ப இருப்பாக ரூ.21,78,285/- குறிப்பிடப்பட்டிருந்தது. 18.09.2024 அன்று வரவு சேர்த்து ரூ.29,64,163/- என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் இறுதி இருப்பாக ரூ.13,96,963/- இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அவற்றில் ரூ.12,00,000/-ஐ தற்காலிக பணியாளரான திரு.T.கருணாநிதி அவர்களிடம் கொடுத்து திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கியின் கொடைகானல் கிளையின் கணக்கு எண்.206077720ல் கட்டுமாறு

அறிவுறித்தியதின் பேரில் இன்று செலுத்தப்பட்டது தெரியவந்தது. மேலும் ரூ.3,50,000/- திரு.T.கருணாநிதி அவர்கள் வசமே கொடுக்கப்பட்டிருப்பதாக செயலாளர் திரு.இராமசாமி தெரிவித்தார். பின்னர் துணைக்காவல் கண்காணிப்பாளா அவர்கள் கூட்டுறவு கடன் சங்கத்தின் லாக்கரை திறந்து காட்டுமாறு தெரிவித்ததின்பேரில் நான் மற்றும் கூட்டுறவு சார்பதிவாளர் முன்னிலையில் லாக்கரானது திறந்து பார்க்கப்பட்டது. அவற்றில் 100 எண்ணிக்கை கொண்ட ஐந்நூறு ரூபாய் கட்டுகள் 20 எண்ணிக்கையில் ரூ.10,00,000/- மற்றும் ரூ.500x37=18,500/-, நூறு ரூபாய் கட்டுகள் இரண்டு எண்ணிக்கையில் ரூ.20,000/- மற்றும் 100x69=6900/-, ரூ.200x8=1600, என மொத்தம் ரூ.10,47,000/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்தபணம் நல்லமுறையில் மேற்படி அலுவலர்கள் முன்னிலையில் லாக்கரில் வைத்து பூட்டப்பட்டது. பின்னர் செயலாளர் திரு.இராமசாமி அவர்களிடம் இறுதி இருப்பு குறைவாக இருப்பது குறித்து கேட்டபோது ரூ.3,50,000/- தற்காலிக பணியாளர் திரு.கருணாநிதி அவர்களிடம் கொடுக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். எவ்வித காரணமும் இல்லாமல் தற்காலிக பணியாளரிடம் கடன் சங்கத்தின் பணத்தை கொடுத்திருப்பது விசாரணையில் தெரியவந்தது. பின்னர் என் முன்பாக அந்த அலுவலகத்தின் எழுத்தரான திரு.சவடமுத்து என்பவரது இருக்கையின் இடது பக்க டிராயரை திறந்து பார்த்தபோது கத்தையாக பணம் இருப்பது கண்டறியப்பட்டது. அதனை என் முன்பாக எண்ணிபார்த்தபோது ரூ.98,546/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் குறித்து திரு.சவடமுத்து அவர்களிடம் விளக்கம் கேட்டபோது கடன் சங்கத்தின் இறுதி இருப்பு எழுதப்பட்டபின்பு மூன்று வாடிக்கையாளர்கள் நகை திருப்புவதற்காக வந்ததாகவும், நகையை கொடுத்தபின்பு அவர்கள் செலுத்திய பணத்திற்கு ரசீது எழுதி கொடுத்ததாகவும், அதில் திரு.ராஜசேகரன் என்பவர் அவர் செலுத்தவேண்டிய பணம் ரூ.46,738/-ல் ரூ.2,496/- குறைவாக கொடுத்துவிட்டு மீதி பணத்தை 19.09.2024 அன்று கொடுப்பதாக தெரிவித்து சென்றதாக தெரிவித்தார். மேற்படி வாடிக்கையாளர்கள்

செலுத்திய பணம் தொடர்பாக ரசீதுகளை ஆய்வு செய்தபோது கீழ்கண்டவாறு பணம் செலுத்தியது தெரியவந்தது.

| வ.எண் | உறுப்பினர் பெயர் மற்றும் கணக்கு எண் | செலுத்திய தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.V.ராஜசேகரன், கணக்கு எண்.66687065001056 KCCAH Loan | 46,738/- |
| 2 | திரு.V.ராஜசேகரன், கணக்கு எண்.66687065017774 Gold Loan | 45,808/- |
| 3 | திரு.S.K.சதாசிவம்,, கணக்கு எண்.66687097003118 Share Amount | 6,000/- |
| | மொத்தம் | 98,546/- |

திரு.சவடமுத்து அவர்களது விளக்கம் ஏற்றுக்கொள்ள தக்கவகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.98,546/- என் முன்னிலையில் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் செயலாளர் திரு.இராமசாமி அவர்களிடம் 2022-2023 காலத்தில் மன்னவனூர் கூட்டுறவு கடன் சங்கத்தில் வழங்கப்பட்ட வட்டியில்லா கால்நடை பராமரிப்பு கடன் வழங்கபட்ட உறுப்பினர்களின் விபரங்களை வழங்குமாறு துணைக்காவல் கண்காணிப்பாளர் கேட்டுக்கொண்டார். அவரும் 153 பயனாளிகளுக்கு கடனாக ரூ.57,54,000/- வழங்கபட்டுள்ள விபரங்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த விபரங்கள் அடங்கிய நான்கு தாள்கள் அங்கிருந்த செயலாளர் திரு.இராமசாமி அவர்களின் சான்றொப்பம் பெறப்பட்டு மகஜரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அந்த அலுவலகத்தின் தற்காலிக பணியாளரான திரு.T.கருணாநிதி என்பவரின் டிராவல் பேக் ஆய்வுக்குழு ஆய்வாளர் முன்பு சோதனை செய்யப்பட்டது. அப்போது அந்த பையில் தங்கநகைகள் மற்றும் பணம் இருப்பது கண்டறியப்பட்டது. அந்த நகைகளை பார்வையிட்டபோது கொடைக்கானல் கனரா வங்கியில் 78.500 கிராம் எடையில் அடகு வைக்கப்பட்டு திருப்பப்பட்டுள்ளதாக தெரியவந்தது. பணத்தை எண்ணிபார்த்தபோது 200x100=20,000/- இருப்பது தெரியவந்தது. அந்த பணம் குறித்து அவரிடம்

விளக்கம் கேட்டபோது இன்று மன்னவனூர் கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலாளர் திரு.இராமசாமி அவர்கள் ரூ3,50,000/- கொடுத்து மேற்படி நகையை திருப்பி கொண்டு வருமாறும், அந்த நகையை மன்னவனூர் கூட்டுறவு கடன் சங்கத்தில் வட்டியில்லா கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் மறு அடகு வைக்க உள்ளதாக தெரிவித்ததாகவம், அந்த நகைக்கு செலுத்திய தொகை போக மீதிபணம் ரூ.20,000/- நகையுடன் வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளதக்க வகையில் இருந்ததால் மேற்படி நகை 78.500 கிராம் மற்றும் பணம் ரூ.20,000/- நல்லமுறையில் ஆய்வுக்குழு ஆய்வாளர் முன்பாக திரு.கருணாநிதி அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் திரு.கருணாநிதி அவர்கள் அணிந்திருந்த சட்டையின் இடது பக்க மேல்பாக்கெட்டை சோதனை செய்தபோது 500 ரூபாய் தாள்கள் 20 எண்ணிக்கையில் ரூ.10,000/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது அவரது சொந்தபணம் என்று தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளதக்க வகையில் இல்லாததாலும், அந்த பணம் கனரா வங்கியில் இருந்து மேற்படி நகையை திருப்பி வட்டியில்லாமல் மன்னவனூர் கூட்டுறவு கடன் சங்கத்தில் திரும்ப வைப்பதற்காக மேற்படி நகையின் உரிமையாளரிடம் லஞ்சமாக பெற்றிருக்கலாம் என்று நம்புவதற்கு முகாந்திரம் இருந்ததால் மகஜரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி கூட்டுறவு கடன் சங்கத்தின் நுழைவு வாயிலை அடுத்து கிழக்கு வாசல் கொண்ட ஒரு அறை இருந்தது. பூட்டப்பட்டிருந்த அந்த அறை குறித்து கேட்டபோது செயலாளர் திரு.இராமசாமி அவர்கள் அந்த அறையானது ஒய்வு அறையாக பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், பணிமுடித்து செல்லமுடியாத நாட்களில் அந்த அறையில் தங்குவதாகவும் தெரிவித்தார். அந்த அறையை என் முன்பாக சோதனை செய்தபோது அந்த அறையில் இருந்த கட்டிலில் விரிக்கப்பட்டிருந்த பெட்சீட் அடியில் ஒரு கருப்பு நிற லேப்டாப் பேக் இருந்தது. அதனை திறந்து பார்த்தபோது பணம் மற்றும் தங்க நகைகள் இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பேக்கிற்குள் நூறு எண்ணிக்கை கொண்ட ஐநூறு ரூபாய் நோட்டு கட்டு ஒன்று

ரூபாய் ஐம்பதாயிரம் மற்றும் மற்றொரு கட்டில் 500x72=37,000/-, 200x2=400, 50x1=50, 20x1=20 மற்றும் மற்றொரு கட்டில் 500x34=17,000, 200x2=400, 20x1=20, 10x1=10 மற்றும் மற்றொரு கட்டில் 500x10=5000 என மொத்தம் ரூ.1,08,900/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் குறித்து செயலாளர் திரு.இராமசாமி அவர்களிடம் விளக்கம் கேட்டபோது அந்த பணம் அவரது சொந்த பணம் என்றும் அவசர தேவைக்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளதக்க வகையில் இல்லாததாலும் கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வட்டியில்லா கடன்களை வழங்கியதற்காக பெறப்பட்ட லஞ்சப்பணம் என்று நம்புவதற்கு தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால் மகஜரில் விசாரணைக்காக பணம் ரூ.1,08,900/- ஆனது கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி பையில் தங்கநகைகள் பாலீதின் கவரில் போடப்பட்டு மன்னவனூர் கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் பெற்றவர் விபரம் எழுதப்பட்டு பின்செய்யப்பட்டிருந்தது. அதன்விபரம் கீழ்கண்டவாறு இருப்பது தெரியவந்தது.

| வ.எண் | கடன் பெற்றவர் பெயர் மற்றும கணக்கு எண் | வழங்கப்பட்ட கடன் தொகை ரூ, |
|---|---|---|
| 1 | திரு.V.முத்துக்கண்ணன், நகைக்கடன் எண்.CC5-7425, நாள்.11.04.2021, மொத்த எடை 18.100கிராம் | 65,000/- |
| 2 | திருமதி.L.ரத்னா நகைக்கடன் எண்.CC5-6422, நாள்.22.02.2021, மொத்த எடை 39.300கிராம் | 1,16,000/- |
| 3 | திருமதி.அமிர்தவள்ளி, க/பெ.கார்த்திகேயன், பூண்டி, கணக்கு எண்.6381, | காதில் மாட்டும் சிறிய சுறை காணப்பட்டது |

மேற்படி நகைகள் குறித்து செயலாளர் திரு.இராமசாமியிடம் கேட்டபோது அந்த நகைகள் 18.09.2024 அன்று அலுவலகத்தில் பொறுப்புகள் முறையாக ஒப்படைக்கப்பட்டபோது சம்மந்தப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படாமல் அலுவலகத்தில் இருப்பது கண்டறிப்பட்டதாகவும், அந்தநகைகள் முறையாக விசாரணைக்குப்பின் சம்மந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப்பட இருப்பதாகவும்

தெரிவித்தார். பின்னர் அங்கிருந்த கூட்டுறவு சார்பதிவாளரும், மன்னவனூர் கூட்டுறவு சங்கத்தின் நிர்வாக அலுவலுருமான திரு.மகேஷ்குமார் அவர்களிடம் மேற்படி நகைகள் என் முன்னிலையில் நல்லமுறையில் ஒப்படைக்கப்பட்டது. மேலும் துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மேற்படி நகைகளை உரிய விசாரணைக்குப் பின்பு சம்மந்தப்பட்ட நபர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு கூட்டுறவு சார்பதிவாளர் திரு.மகேஷ்குமார் அவர்களை கேட்டுக்கொண்டார். பின்னர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் மேற்படி அலுவலகம் அமைந்துள்ள மன்னவனூர் To பூண்டி செல்லும் சாலையில் கைகாட்டி அருகே கூட்டுறவுததுறை என்று பின்பக்க கண்ணாடியில் எழுதப்பட்டு நின்றுகொண்டிருந்த TN57 CZ 1365 என்ற Hyundai Santro கார் குறித்து கேட்டபோது அந்த கார் போளுர் கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலாளர் திரு.கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு சொந்தமானது என்று தெரியவந்தது. அந்த காரின் சாவி குறித்து திரு.கோபாலகிருஷணன் அவர்களிடம் கேட்டபோது அந்தகாரின் சாவியானது மன்னவனூாரில் உள்ள அவரது வீட்டில் இருப்பதாகவும், அதனை எடுத்து வர சொல்வதாகவும தெரிவித்தார். தகவலின்பேரில் மேற்படி காரின் சாவியை அவரது சகோதரி மகன் திரு.ராஜேஸ்கண்ணன் என்பவர் எடுத்துவந்து துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அறிமுகம் செய்து கொண்டு அதனை கொடுத்தார். மேற்படி காரினை என் முன்பாக சோதனை செய்து பார்த்தபோது மேற்படி காரின் Boot space ல் கிரே கலர் ரோஷன் சோல்டர் பேக் ஒன்று நம்பர் பூட்டு போடப்பட்டு இருப்பது தெரியவந்தது. அந்த பேக்கை எடுத்துக்கொண்டு மேற்படி கடன் சங்கத்திற்கு கொண்டு வந்து என் முன்னிலையிலும் மற்றும் கூட்டுறவு சார்பதிவாளர்கள் முன்னிலையில் திரு.கோபாலகிருஷ்ணன் திறந்து காண்பித்தார். அந்த பேக்கை சோதனை செய்து பார்த்தபோது அதற்குள் கருப்பு கலர் Rhythm Hand Bag இருப்பது தெரியவந்தது. மேற்படி Hand Bagஐ திறந்து பார்த்தபோது கீழகண்டவாறு பணம் இருப்பது தெரியவந்தது. 500x36=18,000/-, 100x23=2,300/-, 500x32=16,000/-, 100x31=3,100/-, 500x4=2000/-, 200x3=600/-,

100x10=1,000/-, 50x1=50/-, 20x3=60/- என மொத்தம் ரூ.43,110/-இருப்பது கண்டறியப்பட்டது. மேற்படி பணம் குறித்து திரு.கோபாலகிருஷ்ணன் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது அந்தபணம் அவரது சம்பள பணம் என்று தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், திரு.கோபாலகிருஷ்ணன் அவர்கள் செயலாளராக மன்னவனூர் கூட்டுறவு கடன் சங்கத்தில் செயலாளராக பணிபுரிந்த காலத்தில் தகுதியில்லாத நபர்களுக்கு வட்டி இல்லாத கால்நடை பராமரிப்பு கடன் வழங்கியதாக எழுந்த குற்றச்சாட்டு குறித்து விசாரித்து வரும் விசாரணை அலுவலரான கூட்டுறவு சார்பதிவாளர் திரு.ராஜசேகரன் அவர்களுக்கு லஞ்சமாக கொடுத்து குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிப்பதற்காக கொண்டு வந்திருக்கலாம் என்று நம்வுவதற்கு தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால் பணம் ரூ.43,110/- ஆனது விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர் கீழ்கண்ட ஆவணங்களின் தொடர்புடைய பக்கங்கள் ஒளிநகல்கள் எடுக்கப்பட்டு செயலாளர் திரு.இராமசாமியிடம் சான்றொப்பம் பெறப்பட்டு மகஜரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

| வ.எண் | ஆவணங்களின் விபரம் | தாள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மன்னவனூர் தொடக்க வோளண்மை கூட்டுறவு கடன் சங்க பணியாளர் வருகைப்பதிவேடு 01.04.2024 முதல் | 1 தாள்கள் |
| 2 | மன்னவனூர் தொடக்க வோளண்மை கூட்டுறவு கடன் சங்க Rough Cash Book 2024-2025 | 2 தாள்கள் |
| 3 | மன்னவனூர் தொடக்க வோளண்மை கூட்டுறவு கடன் சங்க உறுப்பினர் நுழைவு புத்தகம் 2796 முதல் 3018 வரை | 2 தாள்கள் |
| 4 | மன்னவனூர் தொடக்க வோளண்மை கூட்டுறவு கடன் சங்க நகைக்கடன் பதிவேடு வரிசை எண்.7415 To 7600 | 2 தாள்கள் |
| 5 | மன்னவனூர் தொடக்க வோளண்மை கூட்டுறவு கடன் சங்க நகைக்கடன் பதிவேடு வரிசை எண்.6331 To 6452 | 3 தாள்கள் |

| | | |
|---|---|---|
| 6 | மன்னவனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க நகைக்கடன் இருப்பு பதிவேடு 02.01.2023 முதல் | 2 தாள்கள் |
| 7 | கும்பூரைச் சேர்ந்த R.முத்துச்சாமி என்பவர் கடந்த 09.09.2024ம் தேதியன்று மன்னவனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் அவர்களுக்கு அளித்த விண்ணப்பம் மற்றும் ஆவணங்கள் | 8 தாள்கள் |

மேற்கண்ட சோதனையில் கீழ்கண்ட நபர்களிடமிருந்து ரூ.2,04,010/- ஆனது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

| வ.எண் | அலுவலரின் பெயர் மற்றும் பதவி | கைப்பற்றப்பட்ட தொகை ரூ |
|---|---|---|
| 1 | திரு.T.கோபாலகிருஷ்ணன், செய்லாளர், DD 320, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், போளுர், கொடைக்கானல் வட்டம், திண்டுக்கல் மாவட்டம். | ரூ.60,110/- |
| 2 | P.முத்துப்பாண்டி, த/பெ. R.பிச்சைமணி,, செக்காபட்டி, நிலக்கோட்டை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் | ரூ.25,000/- |
| 3 | திரு.T.கருணாநிதி, தற்காலிக பணியாளர் (கணிப்பொறி) A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர், கொடைக்கானல் வட்டம், திண்டுக்கல் | ரூ.10,000/- |
| 4 | திரு.R.S.ராமசாமி, செயலாளர், A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், மன்னவனூர், கொடைக்கானல் வட்டம், திண்டுக்கல் மாவட்டம் | ரூ.1.08,900/- |
| | மொத்தம் | ரூ.2,04,010 |

மேலும் சோதனையின் போது துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அலுவலகத்தில் இருந்த கூட்டுறவு சார்பதிவாளர் திரு.ராஜசேகரன் என்பவரை விசாரித்தபோது அதற்கு அவர் இன்று மன்னவனூர் கூட்டுறவு கடன் சங்கத்தில் பொறுப்பினை ஒப்படைப்பது தொடர்பான பணிக்கு வந்ததாகவும், மேலும் திரு.சுந்தரபாண்டியன் என்பவரது பெயரில் அவருக்கு தெரியாமல் மன்னவனூர் கூட்டுறவு கடன் சங்க முன்னாள் செயலாளர்கள் திரு.பிச்சைமணி மற்றும் திரு.கோபாலகிருஸ்ணன் ஆகியோர் முறைகேடாக கடன் வழங்கியிருப்பதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பாக விசாரித்து அறிக்கை தருமாறு திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு இணைபதிவாளர் அறிவுறுத்தியதின் பேரில் விசாரிக்க வந்ததாகவும் தெரிவித்தார். மேலும் கூட்டுறவு சார்பதிவாளர் திரு.மகேஷ்குமார் அவர்களிடம் கேட்டபோது அதற்கு அவர் மன்னவனூர் கூட்டுறவு கடன் சங்கத்தின் நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், கூட்டுறவு கடன் சங்க பொறுப்புகளை செயலாளர் வசம் ஒப்படைப்பது தொடர்பாக வந்ததாகவும் தெரிவித்தார். மேலும் மேற்கண்ட சோதனையின் போது வெளிநபர்கள் யாரும் அலுவலகத்தில் இல்லை. மேலும் இத்திடீர் தணிக்கையின் போது கூட்டுறவு சங்கத்தில் இருந்த பொருட்களுக்கோ அலுவலர்களிடம் இருந்த ஆவணங்களுக்கோ எவ்வித சேதமும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் சோதனையின் போதிருந்த அலுவலர்களுக்கு உடல் ரீதியாகவோ மற்றும் மன ரீதியாகவோ எவ்வித துன்புறுத்தலும் ஏற்படுத்தவில்லை. இந்த திடீர் இணை ஆய்வு தொடர்பாக செயல்முறை குறிப்புகள் 18.09.2024ம் தேதி 17.45 மணிமுதல் 19.09.20242ம் தேதி 01.30 மணிவரை தயார் செய்யப்பட்டது. எனவே மேற்படி கணக்கில் வராத லஞ்சப்பணம் ரூ.2,04,010/- தொடர்பாக 1) கொடைக்கானல் கள அலுவலக கூட்டுறவு சார்பதிவாளர் திரு.V.ராஜசேகரன், 2) திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டம், மன்னவனூர், A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் திரு.R.S.ராமசாமி, 3) திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டம், போளுர், DD 320, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர்

திரு.T.கோபாலகிருஷ்ணன், 4) திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டம், மன்னவனூர், A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் (பணி ஓய்வு) திரு.R.பிச்சைமணி, 5) திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டம், மன்னவனூர், A1291,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தற்காலிக பணியாளர் (கணிப்பொறி), திரு.T.கருணாநிதி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.இப்படிக்குSd/-xxxxx (K.Ibrahim Sait, 19/09/2024)

Sir, Received the complaint on 19.09.2024 at 14.00 Hrs. and registered a case in Dindigul Vigilance and Anti-Corruption Cr.No.07/2024 u/s 7(a)of of P.C Act 1988, as amended by the PC (amendment) Act 2018, on 19.09.2024 at 14.00 hrs. Sd/-xxxxx (J.Nagarajan, Deputy Superintendent of Police, V&AC, Dindigul 19.09.2024)

Original FIR along with the complaint of Tr.K.Ibrahim Sait, the Inspection Cell Inspector, O/o. the Inspection Cell Officer, Madurai and the Joint Surprise check proceedings are submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

19/9/24

(J.Nagarajan)
Dy.Supdt. of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.